# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 8 NOVEMBER இதழ் 11




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

## -: வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :-

"திருமறை ஆசான்" வாசகர்கள் பட்டியலை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்த உள்ளோம். தொடர்ந்து எங்கள் மாத இதழைப் படித்துப் பயன் பெற விரும்புவோர், ஓர் அஞ்சல் அட்டையில் (Post-Card) தெளிவான முகவரியுடன் உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

பதில் வரும் வாசகர்களுக்கு மட்டுமே வரும் புத்தாண்டிலிருந்து "திருமறை ஆசான்" அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*ஆசிரியர்*

## ஆசானின் அறிவுரையிலே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | "ஓய்வு நாள் பிரமாணம்" | 1 |
| 2. | கெட்ட ஆவிகளைத் துரத்துதல் | 10 |
| 3. | பெண்கள் பகுதி<br>கட்டடத்திற்கு அஸ்திபாரம் | 15 |
| 4. | புதிய ஏற்பாட்டு ஆராதனை (3) & (4) | 18 |
| 5. | அற்புதங்களின் அவசியம் என்ன? | 26 |
| 6. | குற்றங்களை அறிக்கையிடல் | 29 |

THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 8 NOVEMBER ISSUE-11

## ஆசிரியவுரை

# "ஓய்வு நாள் பிரமாணம்"

பரிசுத்த வேதாகமத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளவைகளைக் குழப்புவதற்கென்றே, பல போலி மதத் தலைவர்கள் கிறிஸ்தவத்தில் உள்ளனர். இவர்களுடைய வேலையே, வேத வசனங்களைத் தங்கள் லாபத்திற்காகப் புரட்டி, தவறான அர்த்தம் கற்பித்து அதைப் பின்பற்றும் ஒரு கூட்டத்தையும் சேர்த்து விடுவது. இந்தக் குழப்பவாதிகளால், மெய்க்கிறிஸ்தவத்திற்கு ஏற்பட்டுள்ள சேதம் கொஞ்ச நஞ்சமல்ல.

எந்த நாளில் கூடி தேவனை ஆராதிக்க வேண்டுமென்பதில் கூட கிறிஸ்தவ உலகில் ஒருமித்த கருத்து இல்லை. உண்மையான ஆராதனையின் அர்த்தம் தெரியாவிட்டாலும், மிகப் பெரும்பாலோர் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை தேவனை ஆராதிக்க சரியான நாள் என்பதை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால், சில கூட்டத்தார் அப்படி ஆராதிப்பது தவறு என்று பலமாக வாதிடுகின்றனர். பெரும்பான்மையை அடிப்படையாக வைத்து ஒரு காரியம் சரியா அல்லது தவறா என்று தீர்மானிப்பது தேவனுடைய பார்வையில் ஏற்புடையதாக இருக்காதாகையால் "ஓய்வு நாளைக்" குறித்து வேத வசனங்கள் என்ன சொல்லுகிறதென்று நாம் அலசிப் பார்ப்போம்.

## I “ஓய்வு நாள்” பிரமாணம் எப்பொழுது கொடுக்கப்பட்டது?

முதலாவது, இப்பிரமாணம் சிருஷ்டிப்பின் நாட்கள் தொடங்கி, முதல் 2500 ஆண்டுகள் வரைக்கும் கொடுக்கப்படவில்லையென்பதைக் கவனிக்க வேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால் நீதிமானாகிய நோவா, ஆபிரகாம் போன்றவர்கள் அந்த நாளை விசேஷமாகக் கைக் கொண்டிருந்திருப்பார்கள். ஆபிரகாமின் சந்ததியாராகிய இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த பொழுது இப்பிரமாணத்தைக் குறித்து அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி வனாந்திர யாத்திரையில் இருக்கும் பொழுது தான் இப்பிரமாணம் கொடுக்கப்பட்டது என வேதம் கூறுகிறது (உபா. 4:45). கர்த்தர் சீனாய் மலையில் இறங்கி, மோசேயைக் கொண்டு பிரமாணங்களைக் கொடுத்தார் என்று யாத்திராகமம் 19, 20 ஆகிய அதிகாரங்களில் தெளிவாகக் காணலாம். இதை விடவும் தெளிவாக நெகேமியா எடுத்துரைக்கிறார். “நீர் சீனாய் மலையில் இறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசி, அவர்களுக்கு செம்மையான நீதி நியாயங்களையும் நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர். உமது பரிசுத்த ஓய்வு நாளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி.... கற்பித்தீர் (நெகே. 9:13,14)

ஆக, ஓய்வுநாள், இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையான பின், மோசேயைக் கொண்டு, வனாந்திரத்தில் தான் கொடுக்கப்பட்டது. வேத வசனங்களினடிப்படையில் இதுதான் உண்மை.

ஆனால், ஓய்வுநாள் பிரமாணத்தைக் கடைப்பிடித்து, சனிக்கிழமை ஆராதனை செய்யும் கூட்டத்தார், தங்கள் தவறான செயலுக்கு நியாயம் கற்பிக்க ஆதி. 2:2,3 வசனங்களை ஆதாரமாகக் காட்டுவர். அதில், “தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டு பண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார்” என்றுள்ளது. ஆகவே ஓய்வுநாள் பிரமாணம் சிருஷ்டிப்பின் நாட்களிலேயே கொடுக்கப்பட்டது என்றும் பின்வரும் எல்லா மக்களையும் அது கட்டுப்படுத்தக் கூடியது என்றும் சொல்வர்.

இங்கே ஒரு காரியத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். வித்தியாசமான கால கட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட இரண்டு செயல்களைப் பற்றி பின்னாளில் எழுதும் ஆசிரியர்கள் இரண்டும் ஏக காலத்தில் செய்து முடிக்கப்பட்டது போல சொல்வது பேச்சு நடையில் வழக்கமான ஒன்றே. உண்மையில் அவ்விரண்டு செயல்களுக்கும் சில, பல ஆண்டுகள் இடைவெளி இருக்கும். இப்படி சொல்லப்படுவதை ஆங்கிலத்தில் PROLEPSIS என்று சொல்வர்.

உதாரணமாக, இயேசுக் கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட 12 சீஷர்களின் பெயர்கள் மத்தேயு 10:2,3 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பட்டியலில் யூதாஸ் காரியோத் பற்றிக் குறிப்பிடும், மத்தேயு "காட்டிக் கொடுத்த யூதாஸ் காரியோத்" என்று எழுதியுள்ளார். இவன் தெரிந்து கொள்ளப்பட்டு சுமார் 3 ஆண்டுகள் கழித்தே காட்டிக்கொடுத்தான். இவன் சீஷனாகத் தெரிந்து கொள்ளப்பட்டது உண்மை. காட்டிக் கொடுத்ததும் உண்மை. இரண்டுக்குமிடையே மூன்று ஆண்டுகள் இருந்தாலும் இரண்டையும் ஒன்றாக நடந்தது போல மத்தேயு தன் நூலில் குறிப்பிடுகிறார்.

அதைப் போலத்தான் ஆதி. 3:20-ம். இதில், "ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில் அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்" என்றுள்ளது. ஆதாம் தன் மனைவிக்குப் பெயர் சூட்டும் பொழுது அவள் ஒரு குழந்தைக்குக் கூட தாயாக இல்லை. பூமியிலே பல ஜாதிகள் பெருகியிருக்கவுமில்லை. பூமியில் பல ஜாதிகள் உருவாகப் பல நூறு ஆண்டுகள் ஆயின. அதன் பின்பு தான் மோசே ஆதியாகமத்தை எழுதினார். மோசே எழுதும் பொழுது பல வம்சங்கள் பூமியில் இருந்தபடியால், அந்த வம்சமெல்லாம் ஏவாளைக் கொண்டு உருவானபடியால் அவ்வாறு எழுதியுள்ளான். உண்மையில், பெயர் வைக்கப்பட்டதற்கும், வம்சங்கள் பல உருவாவதற்கும் இடையில் நூற்றாண்டுகள் பல இருந்தன. இப்படி எழுதப்படுவது தான் Prolepsis என்று சொல்லப்படுவது இதற்கு இன்னும் சில உதாரணங்கள் வேதாகமத்தில் உண்டு.

ஆதியாகமம் 2:3-ம் வசனமும் இவ்வகையைச் சார்ந்ததே. தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்பது உண்மை. ஓய்வு நாளை ஆசீர்வதித்துப் பரிசுத்தப்படுத்தினார் என்பதும் உண்மை. ஆனால் இவ்விரண்டும் ஒரு சேர நடந்தது அல்ல. இரண்டுக்கும் இடையில் சுமார் 2500 ஆண்டு இடைவெளி உண்டு என்பது உண்மையிலும் உண்மை.

## II "ஒய்வுநாள்" யாருக்குக் கொடுக்கப்பட்டது?

ஒய்வுநாள் பிரமாணம் வனந்திரத்திலே தான் கொடுக்கப்பட்டதென்பது வசனத்தின்படி உண்மையெனில், அது இஸ்ரவேலருக்குத் தான் கொடுக்கப்பட்டதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? உபாகமம் 5-ம் அதிகாரமம் முதல் மூன்று வசனங்கள் இவ்வுண்மைக்குச் சான்று பகர்கிறது. "மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் அழைப்பித்து, அவர்களை நோக்கி : இஸ்ரவேலரே, நான் இன்று உங்கள் காதுகள் கேட்கச் சொல்லும் கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள்; நீங்கள் அவைகளின்படியே செய்யும்படிக்கு அவைகளைக் கைக்கொள்ளக்கடவீர்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே (சீனாய்மலை) நம்மோடே உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன் படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார் (5:1-3) என்றான். இந்த உடன் படிக்கையை தேவன் வேறு எந்தப் புறஜாதியாரோடும் செய்யவில்லை. செய்யவேயில்லை.

இஸ்ரவேலர்களுக்கும் இந்த "ஒய்வுநாள்" ஒரு புது அனுபவமாகவே இருந்தது. பிரமாணம் கொடுக்கப்படும் வரை, எல்லா நாளிலும், எல்லாவற்றையும் செய்து வந்த இஸ்ரவேலர், உடன்படிக்கை ஏற்பட்ட பிறகு அதை மீறுவது தவறு என்று எண்ணினர். ஆகவேதான், ஒய்வு நாளில் விறகு பொறுக்கிக் கொண்டிருந்த ஒருவனைப் பிடித்து, பிரமாணங்களின் தந்தையாகிய மோசேயிடமும், அவன் சகோதரனிடமும் கொண்டுவந்து அவனை என்ன செய்யலாம் என்று கேள்வி எழுப்பினர். (எண். 15:32-36)

இஸ்ரவேலர் தவிர, வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள வேறு எந்த ஜாதியும் தேசமும் ஒய்வுநாளைப் பற்றி வாய் திறந்ததாக வேதாகம சரித்திரத்தில் இல்லவே இல்லை. மேற்சொன்ன வசனங்களிலிருந்து ஒய்வுநாள் இஸ்ரவேலருக்குத் தான் என்பதில் சந்தேகம் எதுவும் தேவையில்லை.

## III "ஒய்வுநாள்" ஏன் கொடுக்கப்பட்டது?

ஒய்வுநாள் இஸ்ரவேலருக்கு ஒரு அடையாளச் சின்னமாகக் கொடுக்கப்பட்டதென்றே தேவனுடைய வார்த்தை கூறுகிறது. தேவன் மோசேயை இவ்விதமாகச் சொல்லப் பணித்தார். "நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஒய்வு நாட்களை ஆசரிக்க வேண்டும்;

உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்றார் (யாத். 31:13) இன்னும் உபாகமம் 5:15-ல் இவ்விதமாகக் குறிப்பிட்டுள்ளார். "நீ (இஸ்ரவேல்) எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையான கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப் பண்ணினார் என்றும் நினைப்பாயாக ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்" என்றும் உள்ளது.

அதாவது, எகிப்திலே இஸ்ரவேலர் அடிமைகளாயிருந்த போது அவர்களுக்கு விடுமுறை என்பது கிடையாது. பார்வோனின் ஆளோட்டிகளால் ஓய்வின்றி கடுமையாக வேலை வாங்கப்பட்டனர். அவர்கள் பட்ட பாடுகளைக் கணக்கிலெடுத்துக் கொண்ட தேவன், இனி நீ அடிமை அல்ல என்றும், அடிமையைப் போல் எல்லா நாளும் வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்றும் சொல்லி, ஓய்வு நாளாக ஒரு நாளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

இந்நோக்கோடு, கொடுக்கப்பட்ட ஓய்வு நாளை தேவன் ஆசீர்வதித்துப் பரிசுத்தப்படுத்தினார். ஆக ஓய்வு நாள் என்பது யூதர்களுக்கு விடுமுறை நாள். அது ஒரு பரிசுத்த நாள்.

## IV. "ஓய்வுநாள்" எவ்வளவு காலத்துக்குக் கொடுக்கப்பட்டது.?

ஓய்வுநாளை ஒரு நோக்கத்தோடு கொடுத்த தேவன், அது எதுவரைக்கும் இருக்கும் என்பதையும் தெளிவுபடுத்தியே உள்ளார். ஏழாம் நாள் கூட்டத்தார் குழப்புவதைப் போல என்றென்றும் வாழும் மனிதர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்கக் கொடுக்கப் படவில்லை.

"ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறை தோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி அதைக் கைக் கொள்ளக்கடவர்கள்" என்றார். (யாத். 31:16), நித்திய உடன்படிக்கை யென்று சொன்ன அதே தேவன், பின்னாளில் கூறும் பொழுது, ஓய்வு நாளை ஒழியப் பண்ணுவேன் என்றும் கூறுகிறார்."அவளுடைய எல்லா மகிழ்ச்சியையும், அவளுடைய பண்டிகைகளையும் அவளுடைய மாதப் பிறப்புகளையும் அவளுடைய ஓய்வு நாட்களையும் சபை கூடுகிற அவளுடைய எல்லா ஆசரிப்புகளையும் ஒழியப் பண்ணுவேன்" என்றார். (ஓசி. 2:11)

"நித்திய உடன்படிக்கை" என்று சொல்வதால் இது எல்லாக் காலத்தையும் கட்டுப்படுத்தக் கூடியது என்று சொல்வர். ஆனால் வேத வசனங்களைக் கூர்ந்து கவனித்தால் இதற்கான அர்த்தம் புலனாகும். தேவன் ஆபிரகாமோடே விருத்தசேதன உடன்படிக்கையைச் செய்யும் பொழுது அதுவும் "நித்திய உடன்படிக்கை" என்றே சொல்லப் பட்டுள்ளது. "உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டியது அவசியம்; இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது" (ஆதி. 17:13)

ஏன், பஸ்கா பண்டிகை கூடத்தான் இஸ்ரவேலர்களுக்கு "நித்திய நியமமாக"க் கொடுக்கப்பட்டது. "அந்த நாள் உங்களுக்கு நினைவு கூருதலான நாளாய் இருக்கக் கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக. அதை உங்கள் தலைமுறை தோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக் கடவீர்கள்" (யாத். 12:14) என்றுள்ளது.

'ஓய்வு நாள்' நித்திய உடன்படிக்கையானதால் தான் இயேசுக் கிறிஸ்து ஓய்வுநாளை ஆசரித்தார். ஆகவே நாமும் ஆசரிக்க வேண்டுமென்கிறவர்களே இதற்குப் பதில் சொல்லுங்கள். இயேசுக் கிறிஸ்துவுக்கு எட்டாம் நாளில் விருத்த சேதனம் செய்யப்பட்டுள்ளது. இயேசு பஸ்காவையும் ஆசரித்தார். (லூக். 2-ம் அதி) ஏன் இந்தக் கூட்டத்தார் இதைப் பற்றிப் பேசுவதில்லை. கேட்டால் அவைகள் சடங்காச்சாரப் பிரமாணம் என்று சொல்லி, சம்பந்தமில்லாத வசனத்தைக் காட்டி மழுப்புவர் அல்லது நழுவுவர்.

சரி, அப்படியானால், இந்த உடன்படிக்கை எதுவரை கொடுக்கப்பட்டது என்ற நியாயமான கேள்வி எழவே செய்யும், எதுவரைக்கும் என்பதற்கான தேவனுடைய பதிலைப் பாருங்கள். "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன் நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக்கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல. . . அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது நான் என் நியாயப் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே. 31:31-33) இப்பொழுது, இயேசுக் கிறிஸ்துவால் நமக்குப் புது உடன்படிக்கை கிடைத்துள்ளது தானே. புது உடன் படிக்கையின் கீழ்தானே வாழ்ந்து கொண்டுள்ளோம். பிறகென்ன சந்தேகம்.

மேலும், புற ஜாதியார் தேவனுடைய மக்களாக மாறும் போது ஓய்வுநாள் நீக்கப்படும் என்று ஓசியா தீர்க்கன் முன்னுரைத்துள்ளான். (ஓசி. 2:11, 23)

இன்னும் தெளிவான சாட்சியும் நமக்குண்டு. ஆமோஸ் தீர்க்கதரிசியின் நாட்களில் இஸ்ரவேலர் 'ஓய்வு நாள் பிரமாணத்தினிமித்தம் களைத்துப் போய் அது தங்கள் வியாபாரத்திற்குத் தடையாகவும், கடைப்பிடிக்கப் பாரமாகவும் உள்ளது இந்த ஓய்வு நாள் எப்பொழுது முடியும் என்று கேட்டுள்ளனர். (ஆமோ. 8:6). அப்பொழுது தேவன் தீர்க்கனின் மூலம் கொடுத்த பதிலைப் பாருங்கள். "அந்நாளில் நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப் பண்ணி, பட்டப் பகலிலே தேசத்தை அந்தகாரப்படுத்துவேன்" (ஆமோ. 8:6) என்றார். அப்பொழுது இதைக் கேட்டவர்களால் இதன் பொருளைப் புரிந்து கொண்டிருந்திருக்க முடியாது. ஓய்வுநாள் எப்பொழுதும் இருக்கும் என்றே நினைத்திருப்பர். ஒருவேளை, நாம் அங்கிருந்தாலும் அப்படித்தான் எண்ணியிருப்போம்.

ஆனால், அங்கே சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்திற்கு ஏற்ப, நமதாண்டவர் சிலுவையிலறையப்பட்ட பொழுது ". . . . பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. சூரியன் மத்தியானத்தில் அஸ்தமித்தது .... என்று காண்கிறோம் (லூக். 23:44,45). இதன் பொருள் என்ன? தேவன் முன்னுரைத்தது போல, இயேசுவின் சிலுவை மரணத்தோடு, ஓய்வுநாள் பிரமாணம் முடிந்து போயிற்று என்பது தானே. மேற்கண்ட கருத்தைத் தான் பவுலடியார் தன்னுடைய நூலில் தெளிவுபடுத்துகிறார். "சட்ட திட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து. . ." என்று கூறியுள்ளார். (எபே. 2:15) அதாவது சிலுவையில் ஒழித்தார் என்கிறார்.

இன்னும் கூட, பொருள் பொதிந்த பாணியில் கொலோசேயரில் குறிப்பிடுகிறார்."நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார். ஆகையால் போஜனத்தையும், பானத்தையும் குறித்தாவது, பண்டிகளையும் மாதப் பிறப்பையும், ஓய்வு நாளையுங் குறித்தாவது ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக (கொலோ. 2:14-16) (ரோம. 7:6)

ஓய்வுநாளைக் குறித்தெல்லாம், இனி ஒருவனும் குற்றம் சுமத்தக் கூடாது என்றால், ஓய்வுநாள் இனி இல்லை என்பது தானே பொருள். இதைப் புரிந்து கொள்ளப் பெரிய மேதாவித்தனம் ஒன்றும் அவசியமில்லை. உண்மையை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இருந்தால் அதுவே போதுமானது.

ஆகையால், 'ஓய்வுநாள்' பழைய பிரமாணம் சிலுவையின் மேல் ஆணியடிக்கப்படும் வரைக்கும், இயேசுக் கிறிஸ்துவைக் கொண்டு புது உடன்படிக்கை கொடுக்கப்படும் வரைக்கும், மாம்சப் பிரகாரமான இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. அந்தப் பிரமாணத்துக்கு உரிமை கொண்டாட வேறு எந்த ஜாதிக்கும் ஜனத்துக்கும் உரிமை இல்லை.

## V. புதிய உடன்படிக்கையும், வாரத்தின் முதல் நாளும்

பழைய உடன்படிக்கையின் படியான ஓய்வுநாளை எடுத்துப் போட்ட தேவன், "வாரத்தின் முதல் நாளை" புது உடன்படிக்கையில் கொடுத்துள்ளார். தேவனை ஆராதிக்கும்படியாக கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நாள் "வாரத்தின் முதல் நாளே"

ஏனெனில் :

1. வாரத்தின் முதல் நாளிலே இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். மாற் 16:1-9, லூக். 24:1
2. பரமேறுவதற்கு முன் தம்முடைய சீடர்களை வாரத்தின் முதல் நாளிலே சந்தித்தார். யோவா. 20:1, 19.
3. அப். 2:1-47- சபை ஸ்தாபிக்கப்பட்டது முதல் அன்று நடந்த யாவும் "வாரத்தின் முதல் நாளில்" நடந்தது. ஏனெனில் பெந்தெகொஸ்தே "முதல் நாளில்" தான் வந்தது. லேவி. 23:16
4. பரிசுத்த ஆவி "வாரத்தின் முதல் நாளிலே" கொடுக்கப்பட்டது. அப். 2:1-4.
5. முதல் சுவிசேஷப் பணி "வாரத்தின் முதல் நாளில்" செய்யப்பட்டது. அப். 2:38
6. அப்பம் பிட்கும்படி சீஷர்கள் "வாரத்தின் முதல் நாளிலே" கூடி வந்தார்கள். அப். 20:7.
7. "வாரத்தின் முதல் நாளிலே" கர்த்தருக்குக் கொடுக்கும்படியாய்ச் சொல்லப்பட்டுள்ளது. I கொரி. 16:2
8. "வாரத்தின் முதல் நாள்" தான் கர்த்தருடைய நாள் என்று அழைக்கப்பட்டுள்ளது. 1 வெளி 1:10.

ஆக, இன்றைக்கும் கிறிஸ்தவர்களாகிய நம்மைக் கட்டுப்படுத்தும் நாள் வாரத்தின் இறுதி நாளாகிய "ஓய்வு நாள்" அல்ல. மாறாக தேவனை ஆராதிக்கும் படியாகக் கொடுக்கப்பட்டுள்ள நாள் "வாரத்தின் முதல் நாளே".

EZS ராஜநாயகம்

# WORLD VIDEO BIBLE COLLEGE

***Applications are invited from Committed young men for full time Bible Training***

| | | |
|---|---|---|
| **Duration** | : | 3 years (Semester System) |
| **Qualification** | : | Must be plus 2 pass (Graduates Preferable) |
| **Degree** | : | Bachelor of Biblical Studies |
| **Uniqueness** | : | Only Video Bible College in India. |
| **Teachers** | : | Internationally Known, Committed men of God, of USA. |
| **Teaching** | : | Through Video Equipment with Interpretation |

## SCHOLARSHIP AVAILABLE

***Call or write today for prospectus and other details to***

*The Director*

**World Video Bible College**

Dharapuram Road, KANGAYAM - 638 701

INDIA.

Telephone : (04257) 20030

# கெட்ட ஆவிகளைத் துரத்துதல்

பேய், பிசாசு அல்லது கெட்ட ஆவிகள் மனிதனைப் பீடிக்கின்றன என நம்பும் பலர் இன்றைய உலகில் உள்ளனர். இந்த கெட்ட ஆவிகள் மக்களின் அனுமதியின்றியே அவர்களுக்குள் நுளைந்து, அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளுவதாகவும் இவர்கள் நம்புகின்றனர். இறுதியாக, இந்த கெட்ட ஆவிகளைத் துரத்த, கிறிஸ்துவில் விசுவாசியான ஒருவரால் மட்டுமே முடியும் என அவர்கள் மேலும் நம்புகின்றனர். வேதாகமம் இவ்வாறு கற்பிக்கிறதா?

கிறிஸ்துவின் நாட்களிலும், அப்போஸ்தலர்களின் காலங்களிலும் பிசாசு பிடித்துக் கொள்ளும் நிகழ்ச்சிகள் பல நடந்து வந்தன என நாம் அறிவோம். பல வேளைகளில், கிறிஸ்துவே கெட்ட ஆவிகளைத் துரத்தினார். உதாரணமாக, இப்படிப்பட்ட ஒரு ஆவியை இயேசு துரத்துவதைப் பற்றிய செய்தியை வேதாகமத்தில் நாம் பார்க்கிறோம். "பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள். அவர்கள் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதன் பிரேதக் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது; அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப் போடுவான்; அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் இயேசுவை தூரத்தில் கண்டபோது, ஓடிவந்து, அவரைப் பணிந்து கொண்டு இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்குத் தேவன் பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். ஏனெனில் அவர் அவனை நோக்கி : அசுத்த ஆவியே, இந்த மனிதனை விட்டுப் புறப்பட்டுப் போ என்று சொல்லியிருந்தார். அப்பொழுது அவர் அவனை நோக்கி உன் பேர் என்ன வென்று கேட்பார். அதற்கு அவன் நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்று சொல்லி, தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு அவரை மிகவும்

வேண்டிக் கொண்டான். அப்பொழுது, அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி : பன்றிகளுக்குள்ளே போகும்படி, அவைகளுக்குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக் கொண்டன. இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது. பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, இதைப் பட்டணத்திலும் சுற்றுப் புறங்களிலும் அறிவித்தார்கள். அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும் படி ஜனங்கள் புறப்பட்டு, இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரம் தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள். பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள். அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டுப் போகும்படி அவரை வேண்டிக் கொள்ளத் தொடங்கினார்கள். அப்படியே அவர் படவில் ஏறுகிறபொழுது, பிசாசு பிடித்திருந்தவன், அவரோடே கூட இருக்கும்படி தனக்கு உத்தரவு கொடுக்க அவரை வேண்டிக் கொண்டான். இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல். நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய் கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார். அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணத் தொடங்கினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்". (மாற்கு 5:1-20)

இயேசு கெட்ட ஆவிகளைத் துரத்திய பல சம்பவங்களில் இதுவும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் திரு முழுக்குப் பெற்றிருந்த படியால் அவர்களும் பிசாசுகளைத் துரத்தும் வல்லமையைப் பெற்றிருந்தனர். (மாற்கு 16:17). அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையை யாருக்கெல்லாம் அளித்தார்களோ அவர்களும் கெட்ட ஆவிகளைத் துரத்தக் கூடியவர்களாக இருந்தனர். உதாரணமாக, சமாரிய மக்களுக்கு போதிக்க பிலிப்பு சென்ற போது, "பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால், சொல்லப்பட்டவைகளை ஒரு மனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந்திமிர் வாதக்காரரும் சப்பானிகளும் குணமாக்கப்பட்டார்கள்" என வசனம் கூறுகிறது. (அப். 8:6,7)

கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் வாழ்ந்த காலத்தில், தேவன் பிசாசிற்கு கொஞ்சம் தனிப்பட்ட சுதந்திரம் அளித்திருந்தார் என்பதை நாம் காண முடிகிறது. கிறிஸ்து அல்லது அப்போஸ்தலர்கள் அல்லது அவர்கள் யார் மேல் கைகளை வைத்தனரோ அவர்கள் வந்து பிசாசை விரட்டும் வரை சில மக்களைப் பிடிக்க தேவன் அவனுக்கு அனுமதியளித்திருந்தார். கர்த்தர் சாத்தான் பேரில் அதிகாரமுடையவராக இருந்தார் என்பதை இது நிரூபித்துக் காட்டுகிறது. ஆனால், பெயெல்செபூலினாலே கிறிஸ்து சாத்தானை விரட்டுவதாக சிலர் அவரைக் குற்றஞ் சாடினர். வசனம் கூறுகிறது : "அப்பொழுது, பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு தாவீதின் குமாரன் இவர் தானே? என்றார்கள் பரிசேயர் அதைக் கேட்டு இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப் போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலை நிற்க மாட்டாது. சாத்தானைச் சாத்தான் துத்ரதினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும்? நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந் தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக் கிறான்." (மத்தேயு 12:22-30)

உண்மையென்னவென்றால், தேவனுடைய வல்லமையால் இயேசு பிசாசுகளைத் துரத்தினார்; அதுபோலவே அப்போஸ்தலர்களும் அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் பிசாசுகளைத் துரத்தினர். சாத்தானைக் கொண்டு அவர்கள்

துரத்துவதாக இருந்தால், நிச்சயமாக அவர்கள் சாத்தானை துரத்தியிருக்க மாட்டார்கள். நமது காலத்திற்கு நாம் வரும் இந்தச் சமயத்தில் இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் மரணமடைந்ததும் அற்புதங்களைச் செய்யும் காலம் முடிவுற்றுப் போனதால், அதன் பின்னராக பிசாசு மனிதனைப் பீடிக்கவும், அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக அவர்களைக் கட்டுப்படுத்தவும் அநுமதிக்கப்படவில்லை. அதாவது, கிறிஸ்து, அப்போஸ்தலர்கள் காலத்தில் இருந்ததைப் போல, மக்களில் பிசாசு, பேய் கெட்ட ஆவிகள் இன்று வசிப்பதில்லை. மக்களை இன்றும் பிசாசு பிடிக்கிறது என உரிமை கொண்டாடுவோர் உள்ளனர். பிசாசுகளைத் துரத்தும் வல்லமை தங்களுக்கு உண்டு என கூறுவோர்களும் உள்ளனர். ஆனால் இந்த மக்கள் யார்? வேதாகமத்தில் நாம் காண முடியாத மதங்களிலே இவர்கள் அங்கம் பெற்றுள்ளனர் கர்த்தரின் சபையில் அங்கத்தினராகக் கூட இல்லாத போதகர்கள் இவர்கள். கர்த்தரின் நாமத்தை இவர்கள் தரிப்பதில்லை; வேதாகமத்திற்கு மாறான காரியங்களை இவர்கள் போதித்து வருகின்றனர். வேறு விதமாகச் சொன்னால், அவர்களுடைய சகல செயல்பாடுகளும் அவர்கள் சாத்தானைச் சார்ந்தவர்கள் என்பதையே சுட்டிக் காட்டுகின்றன. இயேசு கூறியதைப் போல, சாத்தானை சாத்தான் எவ்வாறு துரத்துவான்?

இல்லை, கிறிஸ்துவின் காலத்திலும், அப்போஸ்தலர்கள் காலத்திலும் இருந்ததைப் போல இன்றும் மக்களை பிசாசு பிடிப்பதில்லை. பெரும்பாலான மக்களிடத்தில் பிசாசு குடியிருக்கிறான்; ஆனால் அவர்களுடைய அனுமதியில்லாமல் அவர்களுக்குள் அவன் வருவதில்லை. அவனுக்கு வரவேற்பு அளித்து, அவர்களுடன் தங்க அனுமதித்து, துன்மார்க்கமான காரியங்களைச் செய்ய அவன் செல்வாக்கை நாடுவோரிடம் அவன் வசிக்கிறான். மேலுமாக, எப்போது அவர்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி தேவனுக்குக் கீப்ப்படிவதைத் தேர்ந்தெடுக்கின்றனரோ அப்போது பிசாசை அவர்களாகவே உதறித் தள்ளிவிட முடியும்.

தேவனுடைய வார்த்தையை அறியாதவர்களும், கள்ளப் போதகர்களால் ஏமாற்றப்பட்டவர்களும், மக்களின் விருப்பத்திற்கு மாறாக பிசாசு அவர்களைப் பிடிக்கக் கூடும் என நம்ப வைக்கப்படுகின்றனர். சில சமயங்களில், சில நோயாளிகளும், உடல்

ஊனமுற்றோரும், அல்லது மன நோயாளிகளும், கெட்ட ஆவியால் பிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் இது உண்மை அல்ல. மக்களின் அறியாமை, மூடப்பழக்கம் ஆகியவற்றை மூலதனமாக்கி, அவர்களை பிசாசுகள் பிடித்துள்ளன என நம்ப வைத்து, அவற்றைத் துரத்த ஜெபம் செய்ய வேண்டுமானால் ஒரு கணிசமான 'காணிக்கை' தேவை என்பதாகச் சொல்லி அப்பாவி மக்களிடம் பணத்தைக் கறந்து விடும் கள்ளப் போதகர்களும் மதத் தலைவர்களும் இன்று பரவலாக உலா வருகின்றனர். குறிப்பாக, உலகின் இந்தப் பகுதியில் இப்படிப்பட்ட நிறைய காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

நாம் பிசாசிற்கும், அவனுடைய சகல தீய வழிகளுக்கும் சக்திக்கும் அஞ்ச வேண்டும். ஆனால், நாம் அவனை அனுமதித்து நாம் விரும்பினால் ஒழிய, நமது வாழ்வில் அவனாக வர இயலாது. மீண்டுமாக, கர்த்தரை விசுவாசித்து நமது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, நமது பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெறும் போது, நாம் அவனை விட்டு விட முடியும். அவ்வேளையில் சாத்தான் நம்மை விட்டு விலகிப் போகிறான். அந்த வெற்றிடத்தில், நமது வாழ்வின் கர்த்தராக கிறிஸ்துவை நாம் ஏற்றி வைக்கிறோம்.

J.C. சோட்

## -: வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :-

"திருமறை ஆசான்" வாசகர்கள் பட்டியலை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்த உள்ளோம். தொடர்ந்து எங்கள் மாத இதழைப் படித்துப் பயன் பெற விரும்புவோர், ஓர் அஞ்சல் அட்டையில் தெளிவான (Post-Card) முகவரியுடன் உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

பதில் வரும் வாசகர்களுக்கு மட்டுமே வரும் புத்தாண்டிலிருந்து "திருமறை ஆசான்" அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

## பெண்கள் பகுதி

# கட்டடத்திற்கு அஸ்திபாரம்

தங்களை மனைவிகளாகவும், தாய்மார்களாகவும், வீட்டுப் பணிகளைக் கவனிப்பவர்களாகவும் அர்ப்பணித்துக் கொள்ளும் பெண்மணிகள், உலகத்திலேயே மிக முக்கியமான ஒரு பணியைத் தேர்ந்தெடுத்துள்ளனர். ஏனெனில், வீடு தேவன் விரிவுபடுத்திய முதல் நிறுவனம் ஆகும். வீட்டின் கட்டுப்பாட்டிற்குள் தான் மனித உறவின் சகல காரியங்களும் சார்ந்துள்ளன.

தனது கரங்களில் தவழும் பூப்போன்ற அந்த சின்னஞ்சிறு குழந்தையை குனிந்து பார்க்கும் அந்த இளந்தாய், பின்னர் தன் கண்களை மெதுவாக நிமிர்த்தி, பிற்காலத்திலே அக்குழந்தை வாழவேண்டிய இந்த ஆபத்தான உலகத்தையும் பார்க்கிறாள். அவன் சுமக்க வேண்டிய பொறுப்புகளை எண்ணி அஞ்சுகிறாள். அக்குழந்தை இச்சமுதாயத்தில் தனக்கு ஒரு இடத்தைப் பிடித்துக் கொள்ள அதை தயார்ப் படுத்த வேண்டும்; துன்மார்க்கமும், ஆபத்தும் நிறைந்துள்ள இவ்வுலகில், பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அது வாழ வழி செய்யவேண்டும்.

அவன் சந்திக்க வேண்டிய காரியங்களுக்காக அவனை அவள் தயார் செய்வது எப்படி? அவனை எப்படி ஆயத்தப்படுத்துவாள்? எப்படி அவனை அவள் பாதுகாப்பாள்?

இக்கேள்விகளுக்கு விடை காணும் முன்னர், தேவன் காரியங்களை அமைத்திருப்பதில், கணவன் குடும்பத்திற்குத் தலைவனாக இருக்கிறான் என்ற உண்மைக்குச் சற்றுத் திரும்புவோம் : "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள் கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்." (எபே. 5:22-24). எனவே, முதலில் குடும்பமானது தேவனுடைய வசனத்தின் மூலம் வழி நடத்தப்பட்டு, பின்னர் தேவனால் குடும்பத் தலைவனாக நியமிக்கப்பட்ட, குடும்ப குணநலன்களுக்கும், நலவாழ்விற்கும் தேவனால் பொறுப்பாக்கப்பட்ட

கணவனால் வழி நடத்தப்படு கிறது.

ஆனால், அவ்வித வரம் பிற்குள், வீட்டிலிருந்தபடி அன்றாட வாழ்க்கையில் குழந் தைகளை பராமரிப்பது தாயின் பெரிய பொறுப்பாகும். மற்ற எல்லாரையும் விட அவளே குழந் தைகளுடன் அதிக நேரம் இருப் பவள். அவர்களுடைய வளர்ச் சியில் மாபெரும் பங்கும் செல்வாக்கும் உள்ளவள் தாயே. எனவே, இப்படிப்பட்ட பெரும் பொறுப்பை சுமந்து கொண் டுள்ள தாய் என்ன செய்ய வேண்டும், அதை எவ்வளவு நல்ல விதமாகச் செய்ய வேண் டும் என்பதை உணர்ந்து செயல்ப டுவது அவசியமாகும்.

"... தேவன் அன்பாகவே இருக்கிறார்..." என வேதாகமம் கூறுகிறது. (1 யோவான் 4:16). மத்தேயு 22:37-39-ம் வசனங்கள் கற்பிக்கின்றன : "... உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண் டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதே." நமது வாழ்வின் அடிப்படையே அன்பில்தான் கட்டப்பட்டுள்ளது. தேவன் அன்பின் ஊற்றாக இருக் கிறார். நாம் அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். அன்பு மனித சமுதாயத்தின் சிறந்த குணம் மட்டுமல்லாது, மக்கள் உடல் நலத்தோடும், நிதானமான மன அமைதியுடனும் வாழ சகலரும் அவசியம் கைக் கொள்ள வேண்டிய குணமாகும்.

எனவே, ஒரு குழந்தையின் அடிப்படைத் தேவை சரீரப் பூர்வமான, உணர்ச்சி பூர்வமான அன்பு தான். தனது குழந்தை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு செயலிலும் தாயின் அணுகு முறை அன்பின் அடிப்படையில் அமைய வேண்டும்.

குழந்தை அசௌகரியமாக உணரும் போது உடல் நலமில்லா திருக்கும் போதும் அழுவதைத் தவிர வேறு ஒன்றும் அதற்குத் தெரியாது. தாய் வேலைப் பளுவினால் களைத்துப் போயி ருக்கிறாள்; அவளுடைய உடலுக் குத் தேவையான ஓய்வு எடுக் கவே அநேகமாக முடிவதில்லை. இந்நிலையில், இரவு நேரத்தில் குழந்தை அழும் போது, அல்லது வயிற்று வலியாலே, பல்வ லியாலோ அழுது துடித்துக் கொண்டிருக்கும் போது, கோபத்தை வெளிக்காட்டுவது எவ்வளவு எளிது? நமது பொறு மையின்மையால் குழந்தையை கடிந்து கொள்ளுவதும் எளிதல் லவா? ஆனால் அந்த சமயங் களிலே பயப்பட வேண்டு மென்று கூட குழந்தை அறியா

தே! ஓய்ந்து போன அந்த தாய், குழந்தையிடம் கடினமாக நடந்து கொள்ளவோ அல்லது கோபத்திலும் வெறுப்பிலும் குழந்தையை அடிக்கவோ, அவள் எவ்வளவு சோதிக்கப்படுவாள்?

ஆனால் ஒரு இளந்தாய் அவளுடைய குழந்தையிடம் அன்பும் கருணையும் காட்டும் நிலையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். மிகவும் சாந்தமாகவும் ஆறுதலாகவும் குழந்தையிடம் அவள் பேச வேண்டும் தன் மார்போடு குழந்தையை அன்புடன் அரவணைத்து வெகுநேரம் வைத்துக் கொள்ளுவது அவசியம் இப்படிப் பட்ட தொடர்புகளால் பச்சிளம் குழந்தைகூட பாதுகாப்பான ஒரு உணர்வையும் அன்பு செலுத்துபவரோடு இணைந்து கொள்ளும் உணர்வையும் வளர்த்துக் கொள்ளுகிறது. இப்படிப்பட்ட சௌகரியமான உணர்வு, ஒரு குழந்தையின் வாழ்வில் முதல் வருட காலத்தில் மிகவும் பலமாக உருவாகிறது. எதிரான செயல்கள் பாதுகாப்பின்மையையும் உதாசீனத்தையும் கற்பித்து அவனை நிரந்தரமாகக் காயப்படுத்தி விடும்.

குழந்தையின் மனதில் அன்பென்னும் வலிமையான நிச்சயமான அஸ்திபாரத்தைப் போடா விட்டால், அவனுடைய பிற குணங்கள் என்ற கட்டடம் சரியாக கட்டப்படாது. அன்பின் அவசியத்தைப் பற்றி மேலும் அழுத்தமாகச் சொல்லத் தேவையில்லை.

பாதுகாப்பான அன்பென்னும் பரிசை தங்கள் குழந்தைகளுக்கு அளிக்கும் தாய் - பெற்றோர் - இவ்வுலகில் சமாளிக்க வேண்டிய அவசியமான காரியங்களை அவர்களுக்கு அளிப்பதில் முதல் அடி எடுத்து வைக்கின்றனர். அத்தோடு, இவ்வுலகத்தில் அவர்கள் சந்திக்கப் போகும் ஆபத்துக்களிலிருந்தும் கெட்ட செயல்களிலிருந்தும் அவர்களைக் காத்துக் கொண்டு பாதுகாப்பாக வாழ உதவுகின்றனர்.

B.B. சோட்

R.R. ராயகம்

"நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்"

ரோமர். 10 : 10

## புதிய ஏற்பாட்டு ஆராதனை (3)

# நாம் யாரைத் தொழுது கொள்ள வேண்டும்?

சகலமும் படைக்கப்பட்ட நாளிலிருந்து ஆதவனுக்குக் கீழே உள்ள அனைத்தையும் மனிதன் தொழுது வந்திருக்கிறான். ஏன், அந்த ஆதவனையும் கூட அவன் விட்டுவிடவில்லை. உலகச் சுற்றிலும் இலட்சக்கணக்கான தேவர்களும், தேவதைகளும் இருக்கின்றனர். எண்ணிலடங்காத கோயில்களை அவர்களின் பக்தர்கள் கட்டி வைத்துள்ளனர் என்ற போதிலும், தங்களுடைய மதத்தை பற்றி பல மக்கள் திருப்தியாக இருப்பதாகத் தெரியவில்லை. ஏன்? என்ன தவறு நடந்துள்ளது?

ஜீவனுள்ள ஒரே உண்மையான தேவனை மக்களில் பலர் இன்னும் விசுவாசிக்கத் தொடங்காததுதான் தவறு கிறிஸ்து தேவனைப் பற்றிக் கூறும் போது, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்" (யோவான் 4:24) எனவே, மனிதன் தொழுது கொள்ள வேண்டியவர் தேவன் மட்டுமே. இதை அவன் அறிந்து கொண்டு, தேவனைத் தொழுது கொள்ளத் தொடங்கும்போதுதான், இதுவரை அவன் தேடிக்கொண்டிருந்த சமாதானமும் ஆறுதலும் அவனுக்குக் கிடைக்கும்.

தேவன் யார் என்றும், அவரை நாம் ஏன் தொழுது கொள்ள வேண்டும் என்று இப்பாடத்தில் பார்ப்போம்.

### 1. தேவன் சகலவற்றையும் படைத்தவர் :

"ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1) வேதாகமம் இவ்வாறு கூறுகிறது. அதைத் தவிர வேறு சான்று என்ன என விவாதிக்க கூடும். உங்களைச் சுற்றிலும் கொஞ்சம் பார்த்து, தேவன் என்னவெல்லாம் படைத்திருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். உலகமும் அதில் உள்ள சகல பொருட்களும் தேவன்

இருக்கிறார் என்பதற்கான தக்க சான்றாக இருக்கிறது. ஒன்றுமில்லா ததில் இருந்து எதுவும் வர இயலாது. எனவே யாராவது அதை படைக்க வேண்டும், 'வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது' என தாவீது கூறினார். (சங். 19:1) இதை மறுத்துக் கூற யாரால் இயலும்? யார் சர்ச்சை செய்வார்?

தமது சொந்த சாயலாக மனிதனையும், மனுஷியையும் தேவன் படைத்தார். 'பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனிதனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார்; அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும், பெண்ணுமாக சிருஷ்டித்தார்.' (ஆதி. 1:26, 27) 'தேவனாகிய கர்த்தர் மனிதனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனிதன் ஜீவாத்துமாவானான்'. (ஆதி. 2:7)

## 2. மனிதனுடைய பாவங்களிலிருந்து அவனை இரட்சிக்க தமது குமாரனாகிய இயேசுவை தேவன் அனுப்பினார்.

'தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்' (யோவான் 3:16, 17) என கர்த்தர் வரவேண்டியதின் காரணத்தைப் பற்றி நாம் படிக்கிறோம். 'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்' என பவுல் எழுதினார். (ரோமர் 5:8) மீண்டுமாக பவுல் கூறுகிறார் : 'நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும், பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்

கிறார்.' (1 தீமோ. 2:3, 4) நமது இரட்சிப்பைப் பற்றி அவர் எழுது கிறார்: 'கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட் டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டா னதல்ல. (எபேசியர் 2:8,9)

### 3. சரீர, ஆத்தும ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அளித்து தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

'நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந் துண்டாகி, சோதிகளின் பிதாவனிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலு மில்லை' என யாக்கோபு எழுதுகிறார். (யாக்கோபு 1:17) பவுல் கூறுகிறார், 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.' (எபே. 1:3)

### 4. ஒரே ஜீவனுள்ள உண்மையான தேவன் இருக்கிறார்.

தேவன் ஒருவராயிருக்கிறார் என்பது பற்றி பவுல் அறிவித்தார்; 'எல் லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்' (எபேசியர் 4:6) தொடர்ந்து அவர் கூறும்போது,'தேவன் ஒருவரே, தேவனுக்கும், மனிதருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே' என்றார். (1 தீமோ. 2:5)

### 5. தேவன் ஆவியாய் இருக்கிறார்.

நாம் ஏற்கனவே யோவான் 4:24-ல் தெளிவாகப் படித்தபடி தேவன் ஆவியாக இருக்கிறார். வேறுவிதமாகக் கூறினால், தேவன் மாமிசமும், இரத்தமும் உடையவரல்ல. அவர் சரீரமுள்ளவரல்ல. அவர் உலகப் பூர்வமானவரல்ல, எனவே, அவரை நாம் ஆவியென்று அறிந்து கொள்கிறபோது, இவ்வுலகத்திற்கடுத்தவர் அல்ல என்பதையும், வேறு இடத்தைச் சார்ந்தவர் என்றும் நாம் அவரை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

## 6. தேவன் அன்பாக இருக்கிறார்.

'அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும் படிக்குத் தேவன் இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தேவன் நம் மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்த தினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரப் பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது பிரியமா னவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவருடத்தில் ஒருவர் அன்புகூறக் கடனாளிகளாக இருக் கிறோம்' என யோவான் அறிவித்தார் (1 யோவான் 4:8-11) எனவே, நம்மில் அன்பில்லாவிட்டால் தேவனை நாம் அறிய முடியாது. ஏனென்றால் தேவன் அன்பின் வழியாகவே தம்மை வெளிப்படுத்தி யுள்ளார் என்று அவர் கூறுகிறார்.

## 7. தேவன் இன்று ஜீவிக்கிறார்.

கிறிஸ்துவை ஜீவனுள்ள தேவனின் குமாரன் என பேதுரு அறிக்கை செய்தார். (மத்தேயு 16:16) ஜீவனுள்ள தேவனின் சபையைப் பற்றி பவுல் கூறுகிறார். (1 தீமோ. 3:15) மீண்டும் விக்கிரக ஆராதனையை விட்டு விலகி, ஜீவனுள்ள உண்மையான தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கே ஊழியஞ் செய்ய முன் வந்த மக்களைப் பற்றி அவர் கூறுகிறார் (1 தெச. 1:9) தேவன் மரித்துவிட்டார் என அறிவிக்கும் சிலர், தாங்களே ஆவியில் மரித்துப் போனவர்களாகக் காணப்படு கின்றனர். தேவன் ஜீவிக்கிறார். 'தேவன் மரித்தோருக்குத் தேவனாயி ராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாய் இருக்கிறார். . .' என கிறிஸ்து உபதேசித்தார். (மத். 22:32)

## 8. தேவனால் எல்லாக் கூடும்.

யார் இரட்சிக்கப்படக்கூடும் என்பது பற்றி மக்களிடம் இயேசு பேசிக் கொண்டிருக்கையில், அவர் கூறினார் : '. . . . மனிதரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும்...' (மத்தேயு 19:26)

# தொழுது கொள்ளும் முறைகள் (4)

புதிய ஏற்பாட்டு புத்தகத்தின் பக்கங்களை திருப்புகையில், அங்கே மூன்று விததொழுகை முறைகள் குறிப்பிட்டுள்ளதை நாம் காணலாம். அவை ஒவ்வொன்றையும் பற்றி இங்கே நாம் பார்ப்போம். ஒன்றுக்கு மேற்பட்ட தொழுகை முறைகள் சுவிசேஷத்தில் காணப்படுவதை நினைவில் வைத்துக் கொள்ளுவோம். இந்த மாறுபட்ட தொழுகை முறைகளை நாம் அறிந்து, இவற்றில் கர்த்தருக்கு ஏற்புடைய தொழுகை முறை எது என நாம் கண்டு கொள்வோம். இறுதியாக, நம்மைச் சுற்றியுள்ள மக்கள் செய்யும் தொழுகை முறைகள் யாவும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை என்பது கட்டாயமல்ல.

## 1. சுவிசேஷம் அறிவிக்கும் அறியாமையின் ஆராதனை :

"அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கையில், அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கிய மடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும் சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை பண்ணினான் அப்பொழுது எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்கு வாதம் பண்ணினார்கள். சிலர், இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள்: சிலர் : இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிற வனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள். அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக் கொண்டுபோய்: நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா? நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப் பண்ணுகிறாய்; அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள். அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும்; நலமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை. அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று அத்தேனரே எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக் குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிறபடி ஒரு பலி பீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும்

ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனிதர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை மனித ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மை தேடும்படிக்கு அப்படிச் செய்தார், அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவர் அல்லவே, ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனிதருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனிதரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளை குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்." (அப். 17:16-31).

அத்தேனே பட்டணத்தில் விக்கிரக வழிபாட்டை பவுல் சந்தித்தான் என்பதை நீங்கள் கவனிக்க முடியும். அறியாமையால் அவ்வாறு நடைபெறுவதைச் சுட்டிக்காட்டி அவன் குற்றஞ் சாட்டுகிறான். பின்னர், உண்மையும் ஜீவனுமுள்ள தேவனைப்பற்றி அவர்களுக்கு அவன் போதிக்கத் தொடங்குகிறான்.

அவர்கள் விக்கிரகங்களை ஏன் வணங்கிக் கொண்டிருந்தனர்? விக்கிரகங்களுக்கு ஒரு மனிதன் ஏன் தலை வணங்க வேண்டும்? கல், மரம், உலோகம் ஆகியவற்றால் செய்யப்பட்டதே விக்கிரகம் ஆகும். அதற்கு ஜீவனும் ஆவியும் கிடையாது. அது பார்க்கவோ கேட்கவோ, நுகரவோ, பேசவோ, அசையவோ, எண்ணவோ, அல்லது ஆசீர்வதிக்கவோ சக்தியற்ற ஒரு ஜடப் பொருள். இப்படிப்பட்ட ஒரு பொருளால் உருவாக்கப்பட்ட விக்கிரகம் இறுதியிலே "கடவுள்" எனக் கருதப்படுகிறது. ஆனால் பரலோகத்தின் தேவனை அறியாவதர்கள் ஒரு விக்கிரகத்திற்கோ அல்லது இயற்கையின் ஒரு பொருளுக்கோ அல்லது உயிரோடிருக்கும் அல்லது மரித்துப்போன மனிதனுக்கோ தலை வணங்குவர்.

கடந்த காலத்தைப்போல இன்றும் அனைத்துலகிலும் உள்ள மக்கள் தொடர்ந்து விக்கிரகத்தை வணங்குகின்றனர். ஆனால், ஏன்? வடிகட்டிய அறியாமையேதான் பிரச்சனையாகத் தொடருகிறது. ஒரு கிறிஸ்தவனோ அல்லது தன்னை கிறிஸ்தவன் என அழைத்துக் கொள்ளுகிறவன் அல்லது புத்திசாலியான, விவரங்கள் அறிந்த

மனிதன் எவனும் ஒரு விக்கிரகத்தையோ' உருவத்தையோ, படத்தையோ வழிபடமாட்டான்.

**2. சுவிசேஷம் கூறும் வீணான ஆராதனை :**

கிறிஸ்து கூறினார். "மனிதருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்." (மத். 15:9). மீண்டுமாக அவர் சொன்னார். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி : கர்த்தாவே! கார்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருகாலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்." (மத். 7:21-23).

கர்த்தரின் மக்கள் வித்தியாசமான விதங்களில் ஆராதிக்கலாம் என்றும், அவர்கள் அதில் நேர்மையுடனும் உண்மையுடனும் இருக்கும்வரை அவர்களுடைய ஆராதனை தேவனால் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் பகிரங்கமாக இன்றும் கற்பிக்கப்படுகிறது. இது உண்மையல்ல. மனிதருடைய சட்டங்கள், கற்பனைகளின்படியான ஆராதனை வீணான ஆராதனையாகும். "வீணான" என்னும் வார்த்தைக்கு காலியான பயனற்ற, உபயோக மற்ற எனப்பொருள். வேறு விதமாகக் கூறினால், இப்படிப்பட்ட ஆராதனை கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

"கிறிஸ்துவின் நாமத்தில்" ஒரு மக்கள் கூட்டம் கூடுவதால் மட்டும் அவர்களுடைய ஆராதனை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பொருளல்ல. முதலாவதாக, ஒரு பிரிவினை சபையின் அங்கத்தினர்களாக அவர்கள் கூடும்போது, அவர்களுடைய நாமகரண சபையின் பெயரால் கூடுகிறார்களே அன்றி கிறிஸ்துவின் நாமத்தில் அவர்கள் கூடுவதில்லை. அடுத்து ஒரு நாமகரண சபையின் ஆராதனை அந்த அமைப்பின் பிரகாரமாகவே நடத்தப்படும். நியாயத்தீர்ப்பு நாளிலே, பலர் கர்த்தரின் முன்பாக நின்று கொண்டு, அவர்கள் செய்தவைகளையெல்லாம் அவருக்கு நினைப்பூட்டுவார்கள் என்றும், ஆனால் அவருடைய கற்பனைகளுக்கு அவர்கள் கீழ்படியாத காரணத்தாலும், அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாக அவர்கள் இல்லாததாலும், அவர்களை அவர் சபித்து புறம்பாக்குவார் என கர்த்தர் கூறுகிறார்.

உங்களுடைய ஆராதனை மனிதர்களுடைய உபதேசங்களுக்கு ஏற்ப இருந்தால், அதாவது, தேவனுடைய வசனங்களில் காணப்படாத

காரியங்களில் நீங்கள் ஆராதனையில் செய்தால், உங்கள் ஆராதனை வீனானது. ஆகவே, அது கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனவே, உங்கள் நிலையை சோதித்துப் பார்க்க வேண்டிய நேரமிது.

**3. சுவிசேஷம் கூறும் உண்மையான ஆராதனை :**

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" என ஆராதனையைப் பற்றி கிறிஸ்து கூறினார், (யோவான். 4:24)

இங்கே நாம் சில காரியங்களை இப்போது கவனிப்போம். முதலில், ஏற்கனவே நாம் முந்தைய பாடத்தில் கற்றுக்கொண்டதுபோல, நமது ஆராதனைக்கு உரியவர் தேவன் ஆவார். அடுத்து, அவரை ஆராதிக்கிறவர்கள் கர்த்தருடைய நிபந்தனைகளின்படி அவரை ஆராதிக்கவேண்டும். தேவனை ஆராதிக்க யாரும் உங்களை வற்புறுத்தப் போவதில்லை. ஆனால் அவரை ஆராதிக்கத் தேரந்தெடுப்பவர்கள், தங்களுடைய அல்லது பிறருடைய நிபந்தனைகளின்படியின்றி, கர்த்தருடைய நிபந்தனைகளின்படி அவரை ஆராதிக்க வேண்டும். மூன்றாவதாக, ஆராதனை உண்மையோடும் ஆவியோடும் செய்யப்பட வேண்டும். அதற்கு அர்த்தம் என்ன? நமது ஆராதனை ஆவிக்குரிய விதத்தில், அதாவது நேர்மையாகவும் புரிந்து கொண்டும், தாழ்மையுடனும் அமைய வேண்டும், உண்மையோடு என்று கூறும்போது, நமது ஆராதனை சுவிசேஷத்தில் எழுதப்பட்ட காரியங்களின்படியே செய்யப்படவேண்டும். இது மிகவும் எளிமையாக இருக்கும்! அவர்கள் சகலவிதமான சடங்குகள், நடைமுறைகள், மரபுகள், பாரம்பரியங்கள் அனைத்தையும் கடைபிடிக்க விரும்புகின்றனர், ஆனால் கர்த்தர் அவைகளை விரும்புவதில்லையே, அவர்களுடைய கட்டளைப்படி அவரை ஆராதிப்பதையே அவர் விரும்புகிறார், இதற்கு அதிகமாகவோ குறைவாகவோ அவர் கேட்கவில்லை.

புதிய ஏற்பாடு கற்பிக்கும் ஆராதனை முறை இதுவே. நாம் தொடர்ந்து படிக்கும் போது இவ்வாறாகத்தான் ஆதிகிறிஸ்தவர்கள் ஆராதித்தார்கள் என்பதையும், அவ்வாறே நாமும் ஆராதிக்க வேண்டும் என்பதையும் நாம் காணப்போகிறோம், நாம் அனைவரும் அவ்வாறு செய்யும்போது, ஒரே விதமாக ஆராதனை செய்வோம்; கர்த்தர் நமது ஆராதனையை ஏற்றுக்கொள்வார்.

J.C. Choate எஸ்.எஸ். இராஜன்

(தொடரும்)

# அற்புதங்களின் அவசியம் என்ன?

பெந்தெகொஸ்தே இயக்கம் என அழைக்கப்படும் மத அமைப்புகளை இன்று ஒருவர் கவனிக்கும் போது, தேவனுடைய வல்லமையால் அற்புதங்களைச் செய்வதாக உரிமை கொண்டாடிவரும் ஒரு மக்கள் கூட்டத்தை அங்கு காண முடியும்.

தான் அங்கம் வகிக்கும் ஒரு குறிப்பிட்ட பெயரைக் கொண்ட "பரிசுத்த சபை" மட்டுமே தேவனுடைய வல்லமையால் அற்புதங்களை செய்ய முடிகிறதென்றும், பிற அனைத்துக் கூட்டங்களும் பிசாசின் சக்தியைக் கொண்டு தான் அவற்றைச் செய்து வருவதாகவும் எனக்கு மிகவும் அறிமுகமான ஒரு வாலிபன் கூறினான். மேலுமாக கிறிஸ்துவின் சபை, பாப்டிஸ்ட், மெதடிஸ்ட், பிரஸ்பிடேரியன், இவை அனைத்தும் அற்புதங்களைச் செய்ய இயலாமைக்குக் காரணம் அந்த சபைகள் எல்லாம் வீழ்ந்து போன சபைகள் என்றும் அவன் கூறினான்!

பலதரப்பட்ட பெந்தகொஸ்தே குழுக்கள் எல்லாம் உண்மையிலேயே அற்புதங்களைச் செய்கின்றனவா? அவ்வாறு செய்வதாக அவர்கள் கூறுகின்றனர். தங்கள் சபை மட்டுமே தேவனின் வல்லமையால் அற்புதங்களைச் செய்வதாகவும், அனைத்து பிற பெந்தெகொஸ்தே குழுக்களும் சாத்தானுடைய சக்தியால் தான் அப்படிச் செய்வதாக ஒவ்வொரு பெந்தெகொஸ்தே குழுவும் சொல்லிக் கொள்ளுகிறது. இது உண்மையா? ஒருவேளை, இதற்குப் பதில் கிடைக்க நாமும் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டியதாக இருக்கிறது அற்புதங்கள் நடைபெறக் காரணம் என்னவாக இருந்தது? அற்புதங்களின் காரணத்தை நாம் கண்டு பிடித்தால், இன்று அவற்றை யாராவது செய்ய முடியுமா என்று நாம் அறிந்து கொள்வோம்!

உங்களுடைய பார்வைக்காக கீழே தரப்படும் அட்டவணை, அற்புதங்களின் அவசியத்தை விளக்கிக் காட்டுகிறது.

| அற்புதங்களின் காரணங்கள் | |
|---|---|
| ➢ விசுவாசிகளை உண்டாக்க யோவான் 4:48 | ➢ தேவனுடைய வார்த்தை (வேதாகமம்) பூரணமாகக் கொடுக்கப்பட்ட போது அற்புதம் யுகம் முடிவுற்றது. |

| | |
|---|---|
| ➢ வசனத்தை உறுதிப்படுத்த மாற்கு 16:20; எபி 2:2,3. | ➢ 1 கொரி. 13:8-10; யாக்கோபு 1:25; 2 தீமோ 3:16, 17 |
| ➢ எல்லா சத்தியத்திற்குள்ளும் நடத்த. யோவான் 16:13 | ➢ தேவனுடைய வார்த்தையைக் கேட்டு இப்போது விசுவாசம் உண்டாகிறது. ரோமர் 10:17<br>➢ கடைசி நாளில் வசனமே நம்மை நியாயந் தீர்க்கும் யோவான் 12:48 |

தேவனுடைய ஏவுதலால், அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் தேவனுடைய வார்த்தையைப் பேசுவதற்கு ஏதுவாயிற்று என்பதை நீங்கள் கவனிக்க முடியும். இந்த வார்த்தையானது பின்னர் எழுத்து வடிவம் (சுவிசேஷம்) பெற்றது. அவர்களுடைய செய்தி தேவனிடமிருந்து வந்தது என்பதை பொது மக்களுக்கு அவர்கள் நிரூபிக்க வேண்டியவர்களா இருந்தனர். அடையாளங்களினாலே வார்த்தை உறுதிப்படுத்தப்பட்டது. (மாற்கு 16:20; எபி. 2:3,4) பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தையை இந்த அடையாளங்கள் அல்லது அற்புதங்கள் உறுதிப்படுத்தின அதுவே அற்புத கொடைகள் அருளப்பட வேண்டிய காரணமாயிற்று!

புதிய ஏற்பாட்டில் 2 தீமோத்தேயு 4:20-ம் வசனத்திற்கு நாம் திருப்பிக் கொண்டால், துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு விட்டு வந்ததாக பவுல் கூறுவதை நாம் காண முடிகிறது. இங்கே ஒரு நற்செய்தி போதகரை மற்றுமோர் நற்செய்தி போதகர் வியாதியில் விட்டுச்செல்லுகிறார் ஏன்? பவுல் துரோப்பீமுவை சுகப்படுத்தியிருக்க முடியும்; என்றாலும் அவர் அதைச் செய்யவில்லை. அற்புத சுகமளிப்பவர்கள் என தங்களை இன்று கூறிக் கொள்ளும் சிலர் எப்போதுமே தோல்வியைத் தழுவதுபோல, பவுலுக்கு சுகமளிப்பதில் ஒருபோதும் தோல்வி ஏற்பட்டதில்லை. அப்படியிருப்பினும் இந்த நற்செய்தி போதகரை அவர் ஏன் சுகப்படுத்தவில்லை? பதில் எளிது, நண்பர்களே! ஏனென்றால், மக்களை சுகப்படுத்துவது மட்டுமே அற்புதங்கள் அளிக்கப்பட்டதின் காரணம் அல்ல. அது வசனத்தை உறுதிப்படுத்துவதற்காக ஒரு அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருந்தது II கொரிந்தியர் 14:22-ம் வசனத்தில் அந்நிய பாஷை பற்றி பவுல் கூறுவதைக் கவனியுங்கள்: "அப்படியிருக்க அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது..."

துரோப்பீமு வியாதியிலிருந்து சுகப்படுதல் தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்த தேவையற்ற ஒரு காரியமாக இருந்ததால், அவன் மிலேத்துவில் வியாதியாக விடப்பட்டு வந்தான்.

"அற்புத சுகமளிக்கும்" சபைகள் பற்றி நாம் இன்றைய நாட்களில் கேள்விப்படுவது அதிசயமாக இல்லையா? ஆனால் வரி செலுத்த பணம் உண்டாக்கும் சபைகள் பற்றி நாம் ஒருபோதும் கேள்விப்படவில்லை நமது கர்த்தர் வரி செலுத்துவதற்காக மீன் பிடிக்க வேண்டியதாயிற்று! மத். 17:27 இன்று ஏன் முடியவில்லை? "மரித்தோரை எழுப்பும்" சபைகள் என நாம் கேள்விப்படவில்லை. நமது கர்த்தரும் அப்போஸ்தலர்களும் மரித்தோரை எழுப்பினார்கள். "அற்புத சுகமளிக்கும்" சபைகள் இதை ஏன் செய்வதில்லை? பல மக்கள் இன்று பட்டினியாக இருக்கின்றனர். ஒரு "சாப்பாட்டு" சபை உண்டாக்கக் கூடாதா? அவருடைய சீடர்கள் பெரிய காரியங்களைச் செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள் என இயேசு கூறினார். உலகிலுள்ள பசியுற்றவர்களெல்லாம் உணவருந்தும்படியாக இரண்டு துண்டு ரொட்டியைக் கொண்டு எண்ணற்ற ரொட்டித் துண்டுகளை உற்பத்தி செய்யும் சபைகளை ஏன் உருவாக்கக் கூடாது?

**Rag Hawk** ராக் ஹாக்


## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க
E.Z.S. ராஜநாயகம்
கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம் - 638 701.

# குற்றங்களை அறிக்கையிடல்

இவ்வுலகில் ஒருவன் செய்யக்கூடிய மிகவும் கடினமான காரியங்களில் ஒன்று "நான் பாவஞ் செய்திருக்கிறேன்" என்று கூறுவது. வேதாகமத்தை நீங்கள் படித்துப் பார்க்கும் போது, ஒரு சிலரே தங்களை பாவி என ஒத்துக் கொள்ளும் தைரியம் படைத்தவர்களாக இருந்தனர் என்பதை நீங்கள் காண முடியும். அது மட்டுமல்ல, அன்றிலிருந்து இன்றுவரை மனித குலம் இந்த ஒரு காரியத்தில் மட்டும் மாறவில்லை. என்ற போதிலும், மனிதன் ஒரு பாவி; எனவே, "நான் ஒரு பாவி" என அவன் எப்போதுமே கூற இயலும். இது கிறிஸ்தவன் அல்லாதவனுக்கு மட்டுமல்ல; கிறிஸ்தவனுக்கும் இது பொருந்தும்.

தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஒருவன் கிறிஸ்தவனாக வேண்டுமானால், கர்த்தருக்கு விசுவாச முள்ளவனாக இருக்க வேண்டும். ஒருவன் ஒருபோதும் தவறே செய்யாத, முற்றிலும் பரிசுத்தமான ஒரு வாழ்க்கை வாழ முடியும் என்று அதற்கு அர்த்தமல்ல. ஆனால் ஒருவன் தனது அழைப்பிற்கு எவ்வளவு உண்மையுள்ளவனாக இருக்க முடியுமோ அவ்வளவு உண்மையாக இருக்க வேண்டுமென்று அர்த்தம் இவ்வாறு செய்தால், இயேசு கிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களிலிருந்தும் அவனை சுத்தப்படுத்துவதோடு, அவரைப் போல அவன் வெளிச்சத்தில் நடக்க முடியும். (1 யோவான் 1:7) ஆனால் எல்லாரும் விசுவாசத்தில் நிலைத்திருப்பதில்லை. பலர் இடையில் வீழ்ந்து போகின்றனர். பாவ வாழ்க்கைக்குத் திரும்பி விடுகின்றனர். அவர்கள் தவறுகின்றனர்; பாவஞ் செய்கின்றனர். இன்னும் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பினும், அவர்கள் தவறிய பிள்ளைகளாக இருக்கின்றனர். இந்நிலையில் அவர்கள் வீழ்ந்து போகின்றனர். அதே சமயத்தில், அவர்களுடைய உதாரணம் கர்த்தரின் காரியங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்த மாதிரியான நிலையில் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்ய முடியும்?

தங்களுடைய முந்தைய நல் நிலைக்குத் திரும்பிச் செல்லும் வகையில், மனந்திரும்ப மனதில்லாதவர்களிடமிருந்து சுவிசேஷத்தின் வழியில் ஐக்கியத்தை அகற்றிக் கொள்ள வேண்டும். (1 கொரி. 5; மத். 18:15-17) கர்த்தரிடம் திரும்பிவர விருப்பமுள்ளவர்களுக்கு உற்சாகமளிக்க வேண்டும். சொல்லப்போனால், அவர்களைத் திருப்பிக் கொண்டு வர எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். என்ற

போதிலும், அவர்கள் திரும்பி வர வேண்டுமாயின், சுவிசேஷத்தில் காணப்படும் நிபந்தனைகள் அனைத்தையும் கடைபிடிக்க வேண்டும்.

ஒருவன் ஒரு தடவை பாவம் செய்தால், மீண்டுமாக திரும்பிவர நிபந்தனைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பது ஒரு இனிய செய்தி ஒரு தடவை இரட்சிக்கப்படுகிறவன் எப்போதுமே இரட்சிக்கப்பட்ட நிலையில் இருப்பான் என்றோ, ஒரு முறை கர்த்தரைப் பிரிந்து செல்லுகிறவன் எப்போதுமே வீழ்ந்த நிலையில் இருப்பான் என்றோ வேதாகமம் உபதேசிக்கவில்லை. ஒருவன் பாவம் செய்த பின், மன்னிக்கபட முடியும் என்றால், ஒருவன் பாவம் செய்ய கர்த்தர் உற்சாகப்படுத்துவதாக் அர்த்தம் அல்ல. மாறாக, பாவஞ் செய்தவன், மீண்டும் தேவனிடத்தில் கீழ்ப்படிந்து திரும்பி வருவதற்கோ அல்லது வீழ்ந்து போவதற்கோ, அவரிடம் மீண்டும் விசுவாசமுள்ளவனாக இருக்கவோ அல்லது நிரந்தரமாக விலகிப் போகவோ முடிவு செய்யும் சுதந்தரத்தை மனிதனுக்கு கர்த்தர் அளித்திருக்கிறார். ஒருவன் பாவத்தில் வீழ்ந்து போகையில், மீண்டும் அவன் மனந்திரும்பி, கர்த்தரிடம் திரும்பி வந்து சேர அவனுக்கு சாத்தியம் உண்டு. இந்த உண்மையை ஒருவன் தெரிந்து கொள்ளும் போது, தேவனுடைய கருணை, கிருபைக்காக அவருக்கு அதிகமாக நன்றிக் கடன் பட்டிருக்கிறான். லூக்கா 15-ம் அதிகாரத்தில் காணும் கெட்ட குமாரன் கதையைப் படித்துப் பாருங்கள்.

சந்தேகமில்லை; ஒருவன் பாவத்தில் மீண்டும் வீழ்ந்து போவதை கர்த்தர் விரும்புவதில்லை. அத்தோடு ஒருவன் பாவஞ் செய்து மீண்டுமாக அவரிடம் சேர்ந்து கொள்ளுபவன் எப்போதுமே பாதுகாப்பான இடத்திற்கு வந்து விடுவான் என்பது உறுதி இல்லை. எனவே ஒருவன் பின்வாங்கி, தவறி, பாவஞ் செய்தால் அவன் வீழ்ந்து போனதாக அர்த்தம். அதே நிலையில், அவன் தொடரும் வரை அவன் வீழ்ந்து போனவனாகவே இருப்பான்.

ஒருவன் கர்த்தரிடம் திரும்பி வர வேண்டுமானால், அதாவது பாதுகாப்பான இடத்திற்கு வர, அவன் சில காரியங்களைச் செய்ய வேண்டியவனாக இருக்கிறான். முதலாவதாக, அவனுடைய சகல பாவங்களுக்காகவும் உண்மையாகவே மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்ப வேண்டும். இதைப் படம் பிடித்துக் காட்டும் கெட்ட குமாரன் கதை (லூக்கா 15) மட்டுமல்லாமல், சீமோன் என்ற மாய வித்தைக்காரனுடைய கதையையும் நாம் பார்க்கிறோம். அவன் முதலில் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, பின்னர் பரிசுத்த ஆவியின் வரத்தை பணத்தினால் சம்பாதித்துக் கொள்ள முயற்சிக்கிறான். பேதுரு மிகவும்

கண்டிப்பாக அவனிடம் மறுப்பு தெரிவித்தான். ". . . தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்த படியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக் கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராத படியால், இந்த விஷயத்தில் உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன் நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான்" (அப். 8:20-24). அதாவது, ஒருவன் மனஸ்தாபப்படவேண்டும், மனந்திரும்ப வேண்டும், அல்லது கெட்டவைகளை இனிச் செய்வதில்லை என விட்டு விடவேண்டும். அவைகளில் அவன் தொடர்ந்தால், அவன் மனந்திருபியிருக்கவில்லை. அடுத்து, அவனுடைய குற்றங்களை அறிக்கையிட வேண்டும். மாய வித்தைக்காரனாகிய சீமோன் தனது பாவங்களை ஒப்புக் கொண்டதை நாம் பார்க்கிறோம். பின்னர், "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது", என யாக்கோபு எழுதினார். (யாக். 5:16). எனவே, ஒருவன் தனது பாவங்களை அறிக்கை செய்ய அல்லது ஒப்புக் கொள்ள விருப்பமிருக்க வேண்டும். ஒவ்வொரு பாவமாக அவன் பட்டடியலிட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆனால், அவன் செய்த பாவங்கள் அவனுக்குத் தெரியும் போது, அவன் யாரிடம் அறிக்கை செய்கிறானோ அவர்களுக்கும் அவன் செய்தது தெரியும் போது, "நான் பாவஞ் செய்திருக்கிறேன்" என்று அறிக்கையிட்டால் போதுமானது. "நான் பாவஞ் செய்திருந்தால். . ." என்று அறிக்கையிடுவது போதாது. ஒருவன் பாவஞ் செய்திருக்கிறான், அல்லது பாவஞ் செய்யாதிருக்கிறான். அவனுடைய குற்றங்களை அறிக்கையிடுவதாக இருந்தால், அவற்றை அறிக்கையிட வேண்டும். இறுதியாக, தேவனிடம் மன்னிப்பு கேட்டு ஜெபம் செய்ய வேண்டும். சீமோனுடைய காரியத்தில் இவ்வாறாக நடைபெற்றிருப்பதை யாக்கோபு 5:16-ம் வசனத்திலும் வேறு வசனங்களிலும் பார்க்கிறோம். இப்படி செய்தால் மட்டுமே ஒரு தவறிய கிறிஸ்தவன் மீண்டும் விசுவாமுள்ள கிறிஸ்தவனாகும் நிலையை அடைய இயலும்.

இவ்வாறாக நடக்கும் பட்சத்தில், மன்னிக்கப்பட்டு முழு ஐக்கியத்திற்குள் மீண்டுமாக அவன் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இப்போது, ஒரு படி மேலே சென்று, இவை அனைத்தும் எவ்வளவு தூரம் பகிரங்கமாக நடைபெற வேண்டும் என்பதைக் கவனிப்போம். முதலாவதாக, ஒருவன் தேவனுக்கு முன்பாக பாவஞ் செய்து, அவனையும் தேவனையும் தவிர வேறு எங்கும் அதைப்பற்றி அறியாதிருந்தால், அதை தேவனிடத்தில் கொண்டு சென்று அங்கேயே முடிவு செய்ய வேண்டும். வேறு எந்த மனிதனும் இதில் சம்பந்தப்பட வேண்டியதில்லை. இரண்டாவதாக, ஒரு நண்பன் அல்லது வேறு யாராவது ஒருவர் முன்னிலையில் ஒருவன் பாவஞ் செய்திருந்தால், வேறு யாரும் தலையிடாமல் அவர்கள் இருவருமே முடிவு செய்து கொள்ள வேண்டும். மூன்றாவதாக, ஒருவன் பகிரங்கமாக, அதாவது பலர் அறிய, பாவஞ் செய்திருந்தானானால், பின்னர் அக்காரியம் சபைக்கு முன்பாக எடுத்துச் செல்லப்பட்டு, அந்நபர் தனது வாழ்க்கையில் திருந்துவது, சகல சபை உறுப்பினர்களுக்கும் தெரிய வேண்டும். எனவே, ஒருவனுடைய பாவம் மற்றவர்களோடு சம்பந்தப்பட்டிருந்தால், அதற்காக மனஸ்தாபப்பட்டு, தொடர்புடையவர்களோடு அதை சரி செய்து கொள்ள வேண்டும்.

நீங்கள் ஒரு தவறு செய்யும் கிறிஸ்தவனாக இருப்பின், இன்னும் உங்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கும் போது, கர்த்தரிடத்தில் திரும்பி வர மாட்டீர்களா? இது உங்கள் பேரிலும் உங்கள் சம்பந்தப்பட்டவர்கள் பேரிலும் உள்ள அக்கறையால் கேட்கப்படுகிறது. நீங்கள் திரும்பி வர ஜெபம் செய்வோர் இருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் வீட்டிற்குத் திரும்பிவர கர்த்தர் வேண்டுகிறார்; அழைக்கிறார்.

தமிழில் : எஸ்.எஸ். ராஜன்

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே!

நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்;

நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

மத்தேயு. 11 : 28

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, **NOV** 1995
NOV 1995, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

# -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, “அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, “சான்றிதழ்” வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER
BOOK - POST

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701